**சங்கீதம் 8**

1 எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.

2 பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

3 உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,

4 மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.

5 நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.

6 உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

7 ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும்,

8 ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

9 எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!

**அறிமுகம்:**

இந்த சங்கீதமும் தாவீதினால் பாடப்பட்டது. தாவீது அவருடைய வாழ்க்கையில் எப்பொழுது இந்த சங்கீதத்தை பாடினார்? இந்த சங்கீதம் தாவீது அவருடைய இளம் வயதில், தன்னுடைய தகப்பனின் ஆடுகளை மேய்ந்துக்கொண்டிருக்கும் போது பாடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஒருவேளை தாவீது தன்னுடைய இளம் வயதில் இந்த சங்கீதத்தை பாடியிருந்தால், அவர் தன்னுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டு, இரவில் தேவனுடைய படைப்புகளை பார்த்துக்கொண்டு அவருடைய அதிசயமான, அற்புதமான படைப்புகளை பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவருடைய படைப்புகளில் முதன்மையாக இருக்கிற மனிதன் தன்மையையும் பார்த்து அவனின் நிச்சியமற்ற தன்மையையும் யோசித்திருக்க வேண்டும். இந்த சங்கீதம் தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர் என்பதையும், மனிதன் யார் அவன் எப்படிப்பட்டவன் என்பதையும் காண்பிக்கிறதாய் இருக்கிறது.

தாவீது என்கிற இந்த இளம் மேய்ப்பன் எல்லையற்ற பிரபஞ்சத்தின் கம்பீரமான காட்சியைப் பார்க்கும்போது, வியக்கிறான். அவன் இளமையாக இருக்கலாம், ஆனால் அவனுக்கு ஒரு கூர்மையான மனம் இருக்கிறது. ஆவிக்குரிய மனமும் இருக்கிறது.

அவன் இளமையாக இருந்தாலும், "தேவனின் சொந்த இதயத்திற்கு ஏற்ற மனிதன்" என்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்டிருக்கிறான். நிச்சயமாக, இளம் மேய்ப்பன் தாவீது. நட்சத்திரங்களைப் பார்க்கும்போது, அவனது மனம் தன் தேவனிடம் திரும்புகிறது. மேலும் அவனது தியானங்களில், ஒரு அழகான பாடலுக்கு ஏற்ற வார்த்தைகளைக் காண்கிறான். ஒரு துதிப்பாடலும் நம்பிக்கைப் பாடலும். ஒரு பாடல் - அவன் பாடக்கூடியது, ஒரு நாள் ஆயிரக்கணக்கான தேவனின் மக்களால் பாடப்படும் ஒரு பாடல்.

வானத்தின் நட்சத்திரங்களை ஆச்சரியத்துடன் பார்ப்பது. இது ஒரு உலகளாவிய அனுபவமாக இருக்கலாம் என்றாலும், ஆவியால் மேலும் செயல்படுத்தப்பட்ட தாவீது, அந்த சந்தர்ப்பத்திற்கு சரியான வார்த்தைகளை வைக்கிறார். மேலும், எல்லையற்ற மற்றும் புரிந்துகொள்ள முடியாத இடத்தை நாம் பார்க்கும்போது, ஒரு கட்டத்தில், நாம் அனைவரும் கேட்கும் கேள்விக்கு அவர் பதிலளிக்கிறார்: மனிதன் என்றால் என்ன? பதில் ஒரு பெரிய உண்மையிலிருந்து வருகிறது, இது தாவீது ஒரு மகத்தான தேவனை பற்றிய ஒரு கம்பீரமான பாடலில் அறிவிக்கிறார்.

1. கர்த்தர் மகத்துவமும் மேன்மையுள்ளவர் (8:1-4)
    a. **"உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" (வ 1) -** இந்த சங்கீதம் தேவனை புகழ்ந்து பாடும் சங்கீதமாய் இருக்கிறது. தேவனின் துதியைப்பாடும் சங்கீதமாய் இருக்கிறது. இந்த சங்கீதம் எப்படி தொடங்குகிறது, அப்படியே நிறைவுப்பொறுகிறது. (வ 1) தாவீது இந்த

சங்கீதத்தில் தேவனை அவரின் பெயரான(நாமம்) “யாவே” (YHWH) என வெளிப்படுத்துகிறார். மோசே தேவனிடம் தேவன் பெயரை கேட்கும் போது, அவர் மோசேக்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லும் படியாக, தன்னை வெளிப்படுத்திய பெயர் “இருக்கிறவராக இருக்கிறேன்” யாத் 3:14. தேவன் இருக்கிறார், மற்றும் அவர் நித்தியமானவர் என்பதை காண்பிக்கிறது. அதாவது, தேவன் தானே இருக்கிறார் (God exists by Himself). நம்முடைய தேவனை யாரும் படைக்கவும்வில்லை, அவரை யாரும் படைக்கவும் முடியாது. அவருக்கு, தொடக்கும் இல்லை முடிவும் இல்லை. அவர் உயிர்வாழ்வதற்கு யாரையும் சார்ந்திருக்க வேண்டியது இல்லை. இதனால் தான் தேவன் இருக்கிறார் என கூற முடியாது. ஏசாயா 43:10-13“ நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன்; உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை; நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?” (யோவா 5:26; எசா 44:6; சங் 90:2) புரிந்துகொள்ள உதாரணங்கள்

**புரிந்துகொள்ள உதாரணங்கள்**

🌞 சூரியன் ஒளியைத் தருகிறது, ஆனால் அது தேவனால் படைக்கப்பட்டது.

→ சூரியன் தேவனைச் சார்ந்துள்ளது.

🌿 மண், நீர் மற்றும் சூரிய ஒளி காரணமாக ஒரு மரம் வளர்கிறது.

→ அது வேறு தேவனை சார்ந்துள்ளது.

🕊 ஆனால் தேவன்?

→ அவர் இருப்பதற்கு எதுவும் தேவையில்லை. அவர் அனைத்து உயிர்களுக்கும் ஆதாரம்.

தாவீது இந்த சங்கீதத்தை தேவனின் பெயருடன் தொடங்கி, "உமது நாமம் பூமியெங்கும் எவ்வளவு மகத்துவமானது" என்று அறிவிக்கிறார். தேவனின் பெயர் வெறும் அடையாளம் காட்டும் முத்திரையை விட அதிகம் - அது அவருடைய இயல்பு, இருப்பு மற்றும் அதிகாரத்தைக் குறிக்கிறது. இவை அனைத்தையும் தாவீது "மகத்தானது" அல்லது "சிறந்தது" என்று புகழ்கிறார். இந்த வார்த்தைக்கு அற்புதமான, சக்திவாய்ந்த மற்றும் அற்புதமான ஒன்று என்று பொருள், மேலும் பெரும்பாலும் "மகிமை," "அழகு" மற்றும் "மரியாதை" என்ற சொற்களுடன் தோன்றும். மேலும் தாவீது தேவனின் "நமது

ஆண்டவர்" என்று பேசுகையில், ஒருவேளை "இஸ்ரவேலின் ஆண்டவர்" என்று பொருள்படும் போது, தேவனின் பெயர் "பூமி முழுவதும்" கம்பீரமானது என்று அவர் கூறுகிறார். தேவன் ஒரு குழுவினருக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல - அவர் எல்லாவற்றையும் மற்றும் அனைவருக்கும் மேலானவர். தேவனின் படைப்பாகிய வானங்களை பார்க்கும் போது அவர் எவ்வளவு மகத்துவத்தை நம்மால் பார்க்க முடிகிறது. அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது (சங்கீதம் 113:14).

" குழந்தைகள் மற்றும் பாலகர்கள்" என்று தாவீது பேசும்போது யாரைக் குறிப்பிடுகிறார் என்பதற்கு வெவ்வேறு விளக்கங்கள் உள்ளன.( வ 2 ) தேவன் மிகவும் பெரியவர் மற்றும் வல்லமையுள்ளவர், அவர் தனது படைப்பில் பலவீனமானவர்களைக் கொண்டு செயல்பட்டு, அவரது வலிமையான எதிரிகளை வெல்ல முடியும்! (லூக் 10:21; 1 கொரி 1;21).

b. **"நான் பார்க்கும் போது" (வ3,4)** - இந்த வசனங்கள் தாவீதின் சங்கீதத்திற்கான அடித்தளமாக இருக்கலாம். இந்த சங்கீதம் இரவு வானத்தை உற்று நோக்கும் சூழலிலிருந்து தோன்றுவது போல் தெரிகிறது. அந்தக் காட்சி முதலில் செய்தது, தேவனின் மகத்துவத்தை இந்த உலகத்தையும் பிரபஞ்சத்தையும் விடப் பெரியதாக இருப்பதை தாவீது போற்றி ஒப்புக்கொள்ள வைத்தது. ஆனால் அழகான மற்றும் கம்பீரமான இரவு வானத்தை உற்று நோக்கியது மற்றொரு நம்பமுடியாத சிந்தனையைக் கொண்டு வந்தது. தொடக்க வசனங்கள் போதாதென்று, வானங்களை தேவனின் விரல்களின் வேலை என்று தாவீது விவரிக்கிறார். பரந்த பிரபஞ்சம் என்பது தேவனின் விரல்களுக்குள் பொருந்தக்கூடிய ஒன்று! பூக்கள் மற்றும் மரங்கள் மற்றும் விலங்குகள் மட்டுமல்ல, கோள்கள், சந்திரன்கள் மற்றும் நட்சத்திரங்கள் ஒரு தலைசிறந்த படைப்பாளரின் விரிவான கலைத்திறன். ஒரு குயவன் தனது விரல்களால் களிமண்ணை வேலை செய்வது போல, தேவன் விண்மீன் திரள்களின் பொருளை வேலை செய்கிறார். ஒரு ஓவியர் தலைசிறந்த படைப்பின் ஒவ்வொரு விவரத்தையும் அமைப்பது போல, தேவன சந்திரனையும் நட்சத்திரங்களையும் அவர் விரும்பும் இடத்தில் அமைக்கிறார். ஒரு அழகான ஓவியத்தின் முன் நாம் நிற்கும்போது, கலைஞரின் பார்வை மற்றும் திறமையால் நாம் ஈர்க்கப்படுகிறோம், ஒருவேளை உணர்ச்சி ரீதியாகவும் ஈர்க்கப்படுகிறோம். நாம் வெளியே சென்று இரவு வானத்தைப் பார்க்கும்போது, **"மாபெரும் நான்"** என்ற ஒரு மகா மேன்மையான தேவனின் தலைசிறந்த கலைப்படைப்பைப் பார்க்கும் பாக்கியம் நமக்குக் கிடைக்கிறது.

c. **"அவன் எம்மாத்திரம்" (வ 4) –** தேவனின் அளவில்லா வல்லமையை நாம் பார்க்கும் போது, மனிதர்களாகிய நாம் ஒன்றுமில்லை என்பது உண்மையாக

இருக்கும். தேவன், நமக்காக கவலைப்படவும், நம்மை பாரமரிக்கவும் நாம் எம்மாத்திரம், அவர் எல்லாருக்கும் நீதியின் சூரியனை கொடுக்கிறார், மழையை கொடுக்கிறார், சுவாசத்தை கொடுக்கிறார். நாம் எல்லாரும் தேவனால் பராமரிக்கப்படுகிறோம் என்பது தான் உண்மை(மத் 5:45; லூக் 6:35) "**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை**"புல 3:22. இது தாவீதை அடுத்த அற்புதமான சிந்தனைக்கு இட்டுச் செல்கிறது - இவ்வளவு சிறிய மற்றும் முக்கியமற்ற நம்மை தேவன் எவ்வாறு நினைவில் வைத்துக் கொள்ள முடியும்? பிரபஞ்சம் நம்மை விட கற்பனை செய்ய முடியாத அளவுக்கு பெரியது - அது தேவனின் விரல்களின் செயல். எனவே கடவுள் நம்மை விட எவ்வளவு பெரியவர்? ஆனால் தேவன் நம்மை நினைவில் கொள்கிறார். அவருடைய மற்ற படைப்புகளில் நாம் எவ்வளவு சிறியவர்களாகத் தோன்றினாலும், நாம் மறக்கப்படுவதில்லை. அவர் மனிதகுலத்தை நினைவில் கொள்வது மட்டுமல்லாமல், நம்மையும் கவனித்துக்கொள்கிறார்! சர்வவல்லமையுள்ள தேவன் தன்னையும், உங்களையும், என்னையும் கவனித்துக்கொள்கிறார் என்ற பெரிய உண்மையைக் கண்டு அவர் உண்மையிலேயே ஆச்சரியப்படுகிறார், பிரமிக்கிறார். நம் அன்றாட வாழ்க்கையில், நாம் மிகவும் பிஸியாகவும் திசைதிருப்பப்பட்டு, நம் சிறிய தன்மையைக் கருத்தில் கொள்ளாமல் போகலாம். எனவே, அவ்வப்போது வெளியே சென்று நட்சத்திரங்களைப் பார்த்து, தேவனின் மகத்துவத்தையும், நமது சிறிய தன்மையையும், கடவுள் நம்மைக் கவனித்துக்கொள்வது எவ்வளவு ஆச்சரியமானது என்பதையும் நினைவில் கொள்வது நல்லது; நாம் முக்கியமற்றவர்கள் அல்ல என்பதை நினைவில் கொள்வது - இல்லை, நாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள், ஏனென்றால் பெரியவர் நம்மை அறிந்திருக்கிறார், நம்மைக் கவனித்துக்கொள்கிறார்.

2. மனிதனின் நிலைமை (8:5-9)
   a. "மகிமையினாலும், கனத்தினாலும்" ( வ 5) – தேவன் எப்படி மனிதர்களுக்கு மகிமையும், கனத்தையும் கொடுத்தார்? தேவன் மகா மேன்மையுள்ளவர், மகத்துவமுள்ளவர். ஆனால் மனிதன் தேவதூதரிலும் சிறியவனாக்கப்பட்டிருந்தாலும். மனிதர்களாகிய நாம் தேவசாயலில் உருவாக்கட்டிருக்கிறோம். ( ஆதி 1:26). தேவனுடைய சுவாசமே நமக்குள் ஆத்துமாவாக இருக்கிறது. (ஆதி 2:7). எந்த மிருகத்திற்கும், விலங்குக்கும் தேவன் இந்த மேலான நிலையை கொடுக்கவில்லை.பாவம் நம்மை தேவனைவிட்டுவிலக்கி, தேவ மகிமையை இலக்கும் படி செய்யத்து. ஆனால் இயேசு கிறிஸ்து நமக்காக பலியானர், அவர் நமக்காக உதவியாக

கைக்கொடுத்தார், எந்த தேவ தூதருக்கோ! மிருகத்திற்கோ இல்லை (எபி 2:15,16). பாவத்தினால் இழந்த மகிமையும் கனமும், கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது நாம் கிறிஸ்துவினால் பெற்றுக்கொள்கிறோம். (எபே 2:6) இதினால் தான் நாம் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசுட்டப்பட்டிருக்கிறோம்.

b. "அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படித்தினார்" ( வ 6-8) – தேவன் படைத்த முதல் மனிதனான ஆதாமுக்கு தேவன் இந்த பூமியில் இருக்கும் எல்லாவற்றையும் கீழ்படித்தினார், அவனை சகலத்தை ஆண்டுக்கொள்ளும் படி செய்தார் (ஆதி 1:28). அன்று, முதல் இன்று வரை மனிதர்களாகிய நாம் இந்த பூமியில் எல்லாவற்றையும் ஆளுபவராக இருக்கிறோம். மிருகங்கள், பறவைகள், விண்வெளியில் ஆராய்ச்சி வரை சென்று இருக்கிறோம், எபிரெயர் 2வது அதிகாரத்தில் எபிரெய ஆசிரியர் இந்த வசனப்பகுதியை மேற்க்கொள் காண்பித்து மனிதன் எல்லாவற்றையும் ஆண்டுக்கொண்டிருந்தாலும், ஒரு காரியத்தை மற்றும் அவனால் ஆண்டுக்கொள்ள முடியவில்லை. அது தான் மரணம். இந்த மரணம் ஒன்று தான் (எபி2:15). மனிதர்கள் மத்தியில் மரணம் என்பது பயத்திற்குரியத்தாய் இருக்கிறது. இந்த மரணம் என்பதை வைத்தே பிசாசு ஏவாளை ஏமாற்றினான் (ஆதி 3:4), மரண பயத்தினாலே பிசாசு தந்திரமாய் விளையாடிக் கொண்டிருக்கிறேன் (ஆதி 25:31; மத் 4:3-6). ஆனால் இயேசு மரணம் அடைந்து, உயிர்தெழுத்து மரணத்தை வெற்றிக்கொண்டு (2 தீமோ 1:10). ஜீவனை நமக்கு வெளிப்படுத்தியதினால் பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட்டன. நாமும் இயேசுவினால் பிசாசை வெற்றிக்கொள்கிறோம் (ரோம 16:20). பவுல் தன்னுடைய மரணத்தை பயத்தோடு பார்க்காமல் சந்தோஷத்தோடு பார்த்தார் என்பது பிசாசின் தோல்வி அடைந்தான் என்பதை காண்பிக்கிறது ( 2தீமோ 4:6-9; பிலி 1:21); பேதுரு (2 பேது 1:12-15); கிறிஸ்தவர்கள் (ரோம 16:4) நம்முடைய நம்பிக்கையும் இதுவே (2 தீமோ 4:18)

c. *இயேசு கிறிஸ்து இப்பொழுது மரணத்தை வெற்றிக்கொண்டதால், அவரால் நாமும் மரணத்தை வெற்றிக்கொள்ள முடியும்.*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1 கொரி 15:54)

ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,

ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். ( எபி 2:14-16)

ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். ( எபி 2:14-16)

**நிறைவாக:**

இந்த சங்கீதத்தை நம் மனதில் இவ்வளவு பிரமாண்டமாக முடிக்க, தாவீது இந்த சங்கீதத்தை முடித்த விதத்தை விட சிறந்த வழி எதுவுமில்லை. "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!" இந்த துதிச் சங்கீதத்தைத் தொடங்க அவர் பயன்படுத்திய அதே வார்த்தைகள்தான். தேவன் இல்லாமல், நமக்கு எந்த மதிப்பும் இல்லை. தேவன் இல்லாமல், நாம் விலங்குகளை விட சிறந்தவர்கள் அல்ல. தேவன் இல்லாமல், நாம் இந்த பிரபஞ்சத்தில் சிறியவர்கள், நம் வாழ்க்கைக்கு எந்த அர்த்தமும் இல்லை. வாழ்க்கைக்காக மனச்சோர்வடைந்தால் போதும். ஆனால் தேவனிடம், நமக்கு அர்த்தமும் முக்கியத்துவமும் உள்ளது. தேவன் பூமியில் நமக்கு ஆட்சியையும் பரலோகங்களில் ஆட்சியையும் கொடுத்துள்ளார். (எபேசியர் 2:6). இதை நாம் இப்போது பார்க்கவில்லை, ஆனால் இயேசுவைக் காண்கிறோம், நம் நம்பிக்கை அவரில் தங்கியுள்ளது. இயேசு கிறிஸ்துவில் உங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிறீர்களா? பாவ மன்னிப்புக்காக நீங்கள் ஞானஸ்நானம் பெறவில்லை என்றால், உங்கள் நம்பிக்கை வேறு எங்காவது தங்கியுள்ளது. இன்று கர்த்தரிடம் திரும்பி, கர்த்தருடைய மகிமையாலும் கனத்தாலும் முடிசூட்டப்பட வேண்டிய நேரம் இது.